MCOP No.100/2012

Dated : 15-06-2023

Time: 3.31 p.m to 3.37 p.m

P.W- 1 சாட்சி ராமு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:

மேற்படி 3ம் எதிர்மனுதாரர் வைத்திருந்த நெல்அறுவடை வாகனத்தில் என் மகன் கிளினராக பணிசெய்து வந்தார். மேற்படி சம்பவத்தின் போது 3ம் எதிர்மனுதாரரின் நெல் அறுவை இயந்திரம் பஞ்சர் ஆகி சாலையில் நின்றிருந்தது. அப்போது என் மகன் அந்த பஞ்சர் ஆன டயரை கழற்றி மாற்றிக்கொண்டிருந்தார். அவ்வாறு பணி செய்தபோது சிவப்பு விளக்கு எச்சரிக்கை செய்யப்பற்றிருந்தது. மேலும் அந்த வாகனம் சாலையில் இடதுபுறம்தான் இருந்தது. அப்போது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகம் வந்து என் மகன் மீது மோதிவிட்டார். மேற்படி சம்பவத்தின் போது மாதம் ரூ.5 ஆயிரம் சம்பளம் பெற்றிருந்தார். 3ம் எதிர்மனுதாரர்தான் அந்த அறுவை இயந்திரத்தின் ஓனராகவும் உரிமையாளராகவும் இருந்தார். மேற்படி வாகனம் 4ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டது. மேற்படி விபத்திற்கு காரணமான 1,2 எதிர்மனுதாரர்கள்தான் இந்த விபத்திற்கு காரணம் என்றும், அவர்கள் தான் இழப்பீடு தரவேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**